பக்கம்–5

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்

ஐ.டிஎண்.**5/2013**

தொ. த.சா.1 திரு.சந்திரசேகரன் **22.07.2026**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

27.1.2012 இரவு ஷிப்டிற்கு வேலைக்கு வந்தவர்களுக்கும் 28.1.2012 காலை ஷிப்ட்க்கும் வேலைக்கு வந்தவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கப்பட்டதாக தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.வேலை நிறுத்தம் செய்ததாக சொல்லும் தேதியிலிருந்து ஐந்து நபர் குழு 20.2.2012 ஆம் தேதி அமைக்கப்பட்டது என்றால் சரிதான். வேலை நிறுத்தம் செய்த காலகட்டத்தில் ஐந்து நபர் குழுவோ ட்ரெடு யூனியன் இல்லை என்றால் சரிதான். ஐந்து மாதம் கழித்து தான் தொழில் தகராறு லேபர் கமிஷ்னர் முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 2012 ஆம் வருடம் முதல் இன்று வரை இந்த தொழில் தகராறு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பல இடங்களில் வேலை பார்க்கிறார்கள் என்று சொன்னால் அவர்களை கேட்டால் தான் தெரியும். அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளது அந்த ஆவணங்கள் பற்றி தொழில் தகராறில் சொல்லப்பட்டதா என்றால் வாய்மொழியாக சொன்னோம் ஆனால் அந்த ஆவணங்களை அங்கு ஆஜர்படுத்தவில்லை. வாய்மொழியாக சொன்னதாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பஞ்சு கார்டில் நிறுவனத்தின் பெயர் பணியாளர் பெயர் ஆகியவை இல்லை என்று சொன்னால் ஸ்கேன் செய்தால் தான் காண்பிக்கும். W1 seriesல் உள்ள பன்ச் காடை வைத்து யாருக்கு சொந்தமானது என்று என்னால் சொல்ல இயலாது. W1 சீரிஸில் 22 கார்டுகள் மட்டுமே உள்ளன என்று சொன்னால் இரவு பணி செய்தவர்கள் மட்டும் அவர்களை வைத்திருந்தார்கள் பகல் பணி செய்தவர்களிடம் அவர்கள் வாங்கி விட்டார்கள். அதை மனுவில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியில்லை. W2 ஆவணத்தில் உள்ள ஐடென்டி கார்டு நம்பர் நான் சொல்லி இருக்கும் ஐடெண்டிக் கார்டு எண் வெவ்வேறு என்றால் சரிதான். வி மணிகண்டன் என்பவரின் ஐடென்டிட்டி கார்டில் ஏ டபிள்யூ ப்ராசஸ் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் அந்த பிராசஸ் அந்த நிறுவனத்தில் கிடையாது என்று சொன்னால் தவறு. எட்டு பேரில் அடையாள அட்டை ஆஜர் படுத்தப்பட்டுள்ளது. எட்டு நபரும் வெல்டர் ஆபரேட்டர் என்ற பெயர் என்றால்

சரிதான். 8 பேரும் வெல்டர் வேலை பார்ப்பதற்கு கல்வி தகுதி காண்பிப்பதற்கு ஆவணம் ஏதாவது ஆசை படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆவணம் எதுவும் ஆஜர் படுத்தவில்லை ட்ரெயினிங் எங்களுக்கு கொடுக்கப்படும் பின்னர் தான் வெல்டர் என்று போடுவார்கள். W2 சீரிஸ் ஆவனத்தில் எனது ஐடென்டிக் கார்டு இல்லை. டேட் ஆப் குவாலிபிகேஷன் என்று ஐடெண்டிக் கார்டில் ஒரு காலம் உள்ளது அதில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த கார்டின் பின்பகுதியில் ரினிவல் டீடெயில்ஸ் என்று போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தொழிற்சாலையில் வெல்டிங் டிபார்ட்மென்ட் என்று ஒரு பிரிவு உள்ளது என்றால் சரிதான். வெல்டிங் டிபார்ட்மென்ட் என்பது விபத்து ஏற்படக்கூடிய பிரிவு என்று சொன்னால் சரிதான் அங்கு வேலை செய்பவர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் போட்டு தான் வேலை பார்ப்பார்கள் என்று சொன்னால் சரிதான். தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் மட்டும்தான் இந்த பணியை செய்ய இயலும் என்று சொன்னால் ட்ரைனிங் முடித்த பின்னர் தான் எங்களுக்கு ஐடென்டிட்டி கார்டு கொடுப்பார்கள். பாதுகாப்பிற்காக தேர்ச்சி பெற்றவர்களுக்கு தான் இந்த ஐராண்டிட்டி கார்டு கொடுப்பார்கள் என்றும் இந்த வழக்கிற்காக இந்த ஆவணங்களில் உள்ள விவபரங்கள் தயார் செய்து ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த ஐடென்டிக் கார்டில் எந்தவித மாற்றங்களும் செய்ய இயலாது. வாக்குமூலத்தில் பி குமரன் என்பவரது குறியீட்டு எண் பி 121 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.அவர் பணியில் சேர்ந்த நாள் 15 3 2009 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐடென்டிட்டி கார்டில் அவரது குறியீட்டு எண் W013 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட அடையாள அட்டையில் முத்திரைக்கு மேல் போட்டோ ஒட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மற்றவர்களுக்கு போட்டோவிற்கு மேல் முத்திரை உள்ளது என்று சொன்னால் சரிதான். குமரன் வேலையில் சேர்ந்த தேதி 15.3.2009 என அவரது அடையாள அட்டையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் மூணாவது பக்கத்தில் டேபுலேஷனில் ஐந்தாவது வரிசையில் சதீஷ்குமார் என்பவரின் பெயருக்கு அருகில் டேட் ஆப் ஜாயினிங் மற்றும் அவரது ஐடி ஏன் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வேறு சிலருக்கும் ஐடிஎன் மற்றும் டேட் ஆப் ஜாயினிங் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் தெரிந்தவர்கள் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும் பொழுது

சொன்னார்கள் அதை வைத்து எழுதப்பட்டது. இந்த விபரங்கள் நாங்கள் தாக்கல் செய்துள்ள கிளைம் ஸ்டேட்மெண்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலும் சதீஷ்குமாருக்கு வரிசை எண் 5 டேட் ஆப் ஜாயினிங் மற்றும் ஐடென்டிக் கார்டு நம்பர் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ExW2 சதீஷ்குமாரின் ஐடென்டிட்டி கார்டு ஆஜர் படுத்தப்பட்டுள்ளது. அந்த ஐடென்டிக் கார்டில் டேட் ஆப் ஜாயினிங் மற்றும் ஐடென்டிட்டி நம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு விபரம் தெரியாது என்றும் வழக்குக்காக அந்த W2 ஆவணம் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. லேபர் ஆபிஸரிடம் மனு கொடுத்த பொழுது இந்த விபரங்கள் தெரியாத காரணத்தினால் பிளாங்காக விடப்பட்டது அதே மாதிரி அதே விபரங்களை வைத்து Claim ஸ்டேட்மென்ட் தயார் செய்யப்பட்டதால் அதிலும் சொல்லப்படவில்லை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்திட்ட நாள் 29 6 2026 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கூற்றின்படி அந்த தேதியிலும் அந்த விபரங்கள் தெரியாது என்று தான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.நேர்முக ஆய்வுக்கு நிர்வாகம் வர சொன்னதாக இரண்டு பேரில் இன்டர்வியூ கால் லெட்டரை ஆஜர் படுத்தி உள்ளோம் என்றால் சரிதான். Court நகல்தான் ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான் அசல் ஆவணத்தை நிர்வாகம் பெற்றுக் கொண்டார்கள். ஆர்சிலர் மீட்டல் பன்னாட்டு நிறுவனம் என்று சொன்னால் சரிதான்.பி நடராஜன் மற்றும் பெரியசாமி ஆகியோருக்கு தபால் மூலம் அந்த இன்டர்வியூ கால் லெட்டர்ஸ் அனுப்பப்பட்டது. அந்த தவறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் நடராஜன் மற்றும் பெரியசாமி ஆகியோரின் முகவரி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் குறைந்தபட்ச அளவில் கூட ஆங்கிலம் அந்த ஆவணத்தில் சரியாக இல்லை என்று சொன்னால் அது அவர்களுக்கு தான் தெரியும். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினால் எங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது இருக்கும் என்ற காரணத்தினால் நகலை தயார் செய்து ஆஜர் படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நடராஜனுக்கும் பெரியசாமிக்கும் வெல்டர் சம்பந்தமாக என்ன தகுதி இருந்தது என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஆசை படுத்தவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்தில் ஆஜர்

படுத்தவில்லை. பிரமான வாக்குமூலத்தில் வரிசையில் 33 இல் பி நடராஜ் என்று இருப்பது தான் ExW3ல் உள்ள நடராஜன் என்றால் சரிதான். வாக்கு மூலத்தில் பி நடராஜன் என்பவர் வேலைக்கு சேர்ந்த நாள் 02.03.2010 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ExW3 படி அன்றே தேதியில் தான் அவரை இன்டர்வியூக்கு அழைத்ததாக உள்ளது. என்றால் சரிதான். குவாலிபிகேஷன் இருந்தால் அன்றைய தேதியே அவர்கள் வேலையில் சேரலாம். குவாலிபிகேஷனை காண்பிப்பதற்கு ரெக்கார்ட் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். Ex w4 ஆவணம் ஜெராக்ஸ் ஆவணம் என்றால் சரிதான். Ex w4 ஆம்னத்தில் ஹெச் ஆர் டிபார்ட்மென்ட் என்ற இடத்தில் கையொப்பம் ஏதும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பணியில் இருக்கும் பொழுது வெளியே செல்ல வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட துறையில் அனுமதிக்கப்பட்டு ஹெச் ஆர் இடம் அனுமதி கேட்டு கேட்பாசை வாஜ்மேனிடம் ஒப்படைத்து விட்டு செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஹெச் ஆர் இல்லை என்றால் புரொடக்ஷன் ஹெட் அனுமதி கொடுத்தால் போதும். அவ்வாறு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI

Digitally signed by PACKIAJOTHI
Date: 2026.07.22 18:43:34 +0530

Presiding Officer